செங்காந்தள் மலர் – 1 இதழ் - 1 அரையாண்டிதழ் - ஏப்ரல் 2023
தனிச்சுற்றுக்கு மட்டும் - **Private Circulation Only** **Volume – 1** **Issue – 1** **Half Yearly - April 2023**

# டிரினிடி மகளிர் கல்லூரி

(கலை மற்றும் அறிவியல்)

(சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவு பெற்றது, புதுதில்லி பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) & 12(b) அங்கீகாரம் பெற்றது, தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று குழுவினரால் $A^+$ சான்றிதழ் பெற்றது)

க ச ட த ப ற

ங ஞ ண ந ம ன



ய ர ல வ ழ ள

# செங்காந்தள்

**தமிழாய்வுத்துறை**
டிரினிடி மகளிர் கல்லூரி
மோகனூர் ரோடு, நாமக்கல் – 637002
தமிழ்நாடு

**முதன்மைப் புரவலர்**

திரு. பி.கே. செங்கோடன், தலைவர்

**புரவலர்கள்**

திரு. கே. நல்லுசாமி, செயலர்

திருமதி. அருணா செல்வராஜ், செயல் இயக்குநர்

**முதன்மையர்**

முனைவர் எம்.ஆர்.இலட்சுமிநாராயணன், முதல்வர்

**ஆலோசகர்கள்**

முனைவர் அரசுபரமேசுவரன், உயர்கல்வி இயக்குநர்

திரு. என்.எஸ்.செந்தில்குமார், நிர்வாக அலுவலர்

**முதன்மை ஆசிரியர்கள்**

1. முனைவர் தா.க. அனுராதா, துறைத்தலைவர் (முதுகலை)
2. முனைவர் இரா. சாவித்திரி, துறைத்தலைவர் (இளங்கலை)
3. முனைவர் அ. லதா, உதவிப்பேராசிரியர்
4. முனைவர் சி. கோபியா, உதவிப்பேராசிரியர்

**துணை ஆசிரியர்கள்**

திருமதி. சு. ஜெயமதி, உதவிப்பேராசிரியர்

முனைவர் பா. விஷ்ணுபிரியா, உதவிப்பேராசிரியர்

முனைவர் இரா. அ. அனிதா, உதவிப்பேராசிரியர்

திருமதி. சு. ஹேமலதா, உதவிப்பேராசிரியர்

திருமதி க. பாரதி, உதவிப்பேராசிரியர்

முனைவர் த. கீதா, உதவிப்பேராசிரியர்

திருமதி. க. பத்மாவதி, உதவிப்பேராசிரியர்

**இதழ் வடிவமைப்பாளர்கள்**

ச. ரட்சனா, முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

சு. சரண்யா, முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

## தூய்மையே சேவையாகும்

**முன்னுரை:**

**"தூய்மை கடவுளுக்குச் செய்யும் சேவை"** ஆகும். நிலம், நீர், காற்று என்ற மூன்றும் மனிதனின் சுற்றுப்புறமாக அமைந்துள்ளவை. அவற்றை எவ்வாறு தூய்மையாக வைத்துக் கொள்வது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

தூய்மையைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தூய்மைப்படுத்தல், தூய்மை சேவை செய்வது ஒப்பற்ற பணியாகும்.

**தூய்மை குறித்து வள்ளுவர் தந்த குறள்மொழிகள்:**

தூய்மையைப் பற்றி வள்ளுவரும் பல குறள்களை இயற்றியுள்ளார். நம் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பது நமக்குப் பல வகையிலும் நன்மை பயக்கும்.

**"கந்தையானாலும் கசக்கிக்கட்டு
கூழானாலும் குளித்துக் குடி"** என்பது முதுமொழி.

**" புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும் "**

புறந்தூய்மை என்பது நாம் அன்றாடம் நம்மை ஒழுங்கு செய்தல் முதலியவை மட்டுமல்ல. இந்தியாவில் மக்கள் அதிகமாக வாழும் இடங்கள் முழுவதும் தூய்மையாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டும். மக்களும் அரசும் "புறந்தூய்மையை" ஏற்படுத்துவது அவசியம். அதன் மூலம் சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்லி இருக்கிறார் வள்ளுவர்.

**தூய்மை இந்தியாவை படைத்திடலாம்:**

தேசத்தந்தை மகாத்மா காந்தியின் உண்மையான திட்டமான "தூய்மை பாரதம்" என்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு பாரதப் பிரதமர் "தூய்மை இந்தியா" என்று பொது இடங்களை தூய்மை செய்தல் என்ற முறையில் இத்திட்டத்தை நாடு முழுவதும் தொடங்கி வைத்தார்.

அதன் விரிவாக்கமாக கிராமப்புற வீடுகளில் கழிவறை, கிராமத்திற்கான பொது கழிவறை, பெண்களுக்கான தூய்மைப் பிரச்சாரங்கள், நகர்ப்புறங்களில் கழிப்பறைகள், பள்ளி மற்றும் கல்லூரிகள் போன்றவைகளிலும் தூய்மை பற்றிய சேவையை மேற்கொள்ள வேண்டியவைகள் கடமைகளாகும்.

**இன்று .....பிளாஸ்டிக் குப்பைகள் நம்மைக் கொல்லும்!
இறுதியில் தூய்மையே வெல்லும்!...**


முடிவுரை:

“உன் துடிக்கும் கரங்களால்!...
துடைப்பத்தைப் பிடித்து
பாரதத்தின் துயர்(அசுத்தம்) துடைக்க,....
துடிக்கும் இளைஞனே
எழுந்து வா!!!.....
இந்தியாவின் தூய்மையை உலகிற்கு
காட்டு.....’’

சமூகத்தின் ஆரோக்கியம் சுற்றுபுறத் தூய்மையைப் பொருத்தே அமைகிறது, என்பதை புரிந்து தூய்மை சேவையை கட்டாயம் செய்ய வேண்டும். இனியேனும் நம்மைச் சுற்றியுள்ள இடங்களை தூய்மையாக வைத்திருப்பது நமது கடமையாகும். அதுவே நமக்கும் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் நாம் செய்யும் அரிய உதவியாகும்.

ரா. தவநிதி
முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

## தமிழ் எழுத்துக்கள்



## தமிழ் அன்னை

கருவிலிருந்தே அன்னை பொழிந்த வள்ளல் அரசியே
இன்னுயிர் தந்து ஈன்றெடுத்த தாயே
சிற்பக் கலையின் பெருமைமிகு சிறப்பே
இரத்தத்தை பாலாக கொடுத்த அமிழ்தமே
தமிழை ஊட்டி வளர்த்த அன்னையே
எந்நாளும் உன் பாதம் படிவேன்...!

## தந்தை

தாய்மைக்கு தரம் தந்த தந்தையே
பூமித்தாயின் மீது தவழவிட்ட தவமே
தமிழ்ப் பண்போடு வாழ வைத்த தமிழே...
எந்நாளும் உன்னை சரணடைவேன்.

ச. செல்வமணி
முதுகலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

## தமிழ் மொழி

உலக மொழிகளின் தாயாம்
முச்சங்கம் வளர்த்த மொழியாம்
தேனினும் இனிய மொழியாம்
எம்தெவிட்டாத செந்தமிழ்

தாய் சொல்லி தந்தது
தாலாட்டில் கேட்டது
சந்திரனை அழைத்தது
பாட்டிக் கதை சொன்னது
பாடி இன்பம் பெற்றது

கூட்டுறவை வளர்க்கும் மொழி
எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி..!

பா.பாரதி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

# வாழ்க்கை

நிஜங்களுக்கும் நிழல்களுக்குமிடையில்
நிலைதடுமாறும் வயது…
நம்பிக்கைகளுக்கும்
சந்தேகங்களுக்குமிடையில்
சஞ்சலப்படும் மனது…

அன்புக்கு
அதிகபட்ச விலையாய்
அழுகையைத் தரும் மனிதர்கள்
கன்னத்தில் வழியும்
கண்ணீரைக் கண்டு
கைதட்டிச் சிரிக்கும் உலகம்

கண் மூடினால் தெரியும்
கனவுகளைக் கூட
நிஜமென்று நம்பும் கண்கள்
முயன்றாலும் கிடைக்காதது
முட்டாள்தனமான தேடல்கள்
இதுதான் வாழ்க்கை!..

**அ. சாந்தினி**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

# வானம்

அழகிய மேகத்தை உடையாய் தைத்தவளே
இரவு நேரத்தில் நட்சத்திர விழியாள் பார்ப்பவளே
கோடையில் மழையாய்…..குளிரில் பனியாய் பொழிபவளே
மழையால் வளமையும் புதுமையும் செய்பவளே
பரந்து திரியும் பறவைக்கு விரிந்த மைதானம் ஆனவளே!

**தி.சரண்யா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு**

## சுதந்திரம்

கண்ணில் செந்நீர் கொண்டு
நெஞ்சில் வீரம் கொண்டு
மனதில் ஈரம் கொண்டு
எழுந்த வீர மங்கைகள் எங்கே?

இமைக்கும் கண்கள் இடையே
இமைக்கா நொடிகள் துடிக்க
வீரம் எழுச்சி மிகுந்த
இரவுகள் போனது எங்கே?

வானம் இடிஇடிக்க
முரசுகள் முழங்க
குருதி பெருக்கெடுக்க
எழுந்தது புரட்சி!
வந்தது மீட்சி!
கிடைத்தது உயர்ச்சி!

சுதந்திரத்தை காத்து வந்து
தன் உயிர்நீத்த செம்மல்கள்
அனைவருக்கும் எந்தன் முதல் வணக்கம்.

ரா.பவித்ரா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# ஒரு வரி பொன்மொழிகள்

1. ஒவ்வொரு பிரச்சினைக்கு உள்ளேயும் ஒரு வாய்ப்பு உள்ளது.

2. யார் இழப்பதற்கு பயப்படுகின்றார்களோ அவர்களே தோல்வி அடைந்தவர்கள்.

3. நீங்கள் தோல்வியை தவிர்க்கின்றீர்கள் என்றால், வெற்றியையும் தவிர்க்கின்றீர்கள்.

4. உங்களை விமர்சிப்பவர்கள் மட்டுமே உங்களைப் பலம் வாய்ந்தவராக மாற்ற முடியும்.

5. மனிதன் சந்தர்ப்பங்களால் உருவாக்கப்படுபவன்.

6. பெற்றோரை எதிர்ப்பதல்ல காதல், அவர்களையும் அன்போடு அரவணைத்துச் செல்வதே காதல்.

7. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, ஒத்துப் போகாமல் சமுதாயத்தில் வாழ்க்கை நடத்த முடியாது.

8. கவலையைத் துரத்து. எப்போதும் உயர்ந்த எண்ணங்களோடு இரு.

9. நல்ல நண்பர்களோடு தொடர்பு வைத்துக் கொள். நல்ல பழக்கங்கள் உனக்கு வரும்.

10. தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைவிட அதிகமான வாய்ப்புகளை புத்திசாலிகள் உருவாக்கிக் கொள்கிறார்கள்.

தொகுப்பு: ரா.இளவரசி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# சிதறாத பிம்பம்



செ. பூ. பவித்ரா
இளங்கலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு
டிரினிடி மகளிர் கல்லூரி
நாமக்கல் - 637002

## மண்டலா சிவன்




தி. சரண்யா
இளங்கலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு
டிரினிடி மகளிர் கல்லூரி
நாமக்கல் - 637002


ர. தீப்தி
முதுகலைத் தமிழிலக்கியம்
இரண்டாமாண்டு,
டிரினிடி மகளிர் கல்லூரி
நாமக்கல் - 637 002.

**ஆண்டுப் பெயர்கள்**

| தமிழ் | வடமொழி | தமிழ் | வடமொழி | தமிழ் | வடமொழி |
|---|---|---|---|---|---|
| 1 நற்றோன்றல் | **01.** பிரபவ | 21 முற்றறிவு | **21.** சர்வசித்து | 41 நச்சுப்புழை | **41.** பிலவங்க |
| 2 உயர்தோன்றல் | **02.** விபவ | 22 முழுநிறைவு | **22.** சர்வதாரி | 42 பிணைவிரகு | **42.** கீலக |
| 3 வெள்ளொளி | **03.** சுக்ல | 23 தீர்பகை | **23.** விரோதி | 43 அழகு | **43.** சௌமிய |
| 4 பேருவகை | **04.** பிரமோதூத | 24 வளமாற்றம் | **24.** விக்ருதி | 44 பொதுநிலை | **44.** சாதாரண |
| 5 மக்கட்செல்வம் | **05.** பிரசோற்பத்தி | 25 செய்நேர்த்தி | **25.** கர | 45 இகல்வீறு | **45.** விரோதகிருது |
| 6 அயல்முனி | **06.** ஆங்கிரச | 26 நற்குழவி | **26.** நந்தன | 46 கழிவிரக்கம் | **46.** பரிதாபி |
| 7 திருமுகம் | **07.** ஸ்ரீமுக | 27 உயர்வாகை | **27.** விஜய | 47 நற்றலைமை | **47.** பிரமாதீச |
| 8 தோற்றம் | **08.** பவ | 28 வாகை | **28.** ஜய | 48 பெருமகிழ்ச்சி | **48.** ஆனந்த |
| 9 இளமை | **09.** யுவ | 29 காதன்மை | **29.** மன்மத | 49 பெருமறம் | **49.** ராட்சச |
| 10 மாழை | **10.** தாது | 30 வெம்முகம் | **30.** துன்முகி | 50 தாமரை | **50.** நள |
| 11 ஈச்சுரம் | **11.** ஈஸ்வர | 31 பொற்றடை | **31.** ஹேவிளம்பி | 51 பொன்மை | **51.** பிங்கள |
| 12 கூலவளம் | **12.** வெகுதானிய | 32 அட்டி | **32.** விளம்பி | 52 கருமைவீச்சு | **52.** காளயுக்தி |
| 13 முன்மை | **13.** பிரமாதி | 33 எழில்மாறல் | **33.** விகாரி | 53 முன்னியமுடிதல் | **53.** சித்தார்த்தி |
| 14 நேர்நிரல் | **14.** விக்கிரம | 34 வீறியெழல் | **34.** சார்வரி | 54 அழலி | **54.** ரௌத்திரி |
| 15 விளைபயன் | **15.** விஷு | 35 கீழறை | **35.** பிலவ | 55 கொடுமதி | **55.** துன்மதி |
| 16 ஓவியக்கதிர் | **16.** சித்திரபானு | 36 நற்செய்கை | **36.** சுபகிருது | 56 பேரிகை | **56.** துந்துபி |
| 17 நற்கதிர் | **17.** சுபானு | 37 மங்கலம் | **37.** சோபகிருது | 57 ஒடுங்கி | **57.** ருத்ரோத்காரி |
| 18 தாங்கெழில் | **18.** தாரண | 38 பகைக்கேடு | **38.** குரோதி | 58 செம்மை | **58.** ரக்தாட்சி |
| 19 நிலவரையன் | **19.** பார்த்திப | 39 உலகநிறைவு | **39.** விசுவாசுவ | 59 எதிரேற்றம் | **59.** குரோதன |
| 20 விரிமாண்பு | **20.** விய | 40 அருட்டோற்றம் | **40.** பராபவ | 60 வளங்கலன் | **60.** அட்சய |



# நான் விரும்பும் நூல்

## முன்னுரை :

வள்ளுவனைத் தந்தது தமிழகம். அந்த வள்ளுவன் தந்ததோ திருக்குறள் என்னும் உலகப் பொதுமறை. நாடு, மொழி,இனம்,சாதி, சமயம், காலம் முதலிய வேறுபாடுகளின்றி உலக மக்களனைவராலும் ஏற்றுப் போற்றத்தக்க அறநெறிகளைக் கூறும் நூல் திருக்குறளாகும்.

## திருக்குறளின் அமைப்பும் பெருமையும் :

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என முப்பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் 1330 குறள் வெண்பாக்களையும் உடையது.

'எல்லாப் பொருளும் இதன்பாலுள' என நாகனாரும், 'அணுவைத் துளைத்து
ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என ஒளவையாரும் புகழும் நூல்.

## உலகப் பொதுமறை :

திருக்குறள் உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குச் சான்று, உலக மொழிகள் பலவற்றுள்ளும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதுதான். திருவள்ளுவர் தம் திருக்குறளில் உலகோர் அனைவரும் பின்பற்றத்தக்க நெறிகளையே கூறியுள்ளார். கல்வி, கேள்வி, ஒழுக்கம், அடக்கம், வாய்மை, பொறுமை, ஈகை முதலிய பண்புகள் உலகோர் அனைவருக்கும் பொதுவானவைதாமே. இல்லறம், துறவறம், அரசியல், அமைச்சியல், நட்பியல், களவியல், கற்பியல் எனப் பகுத்துக்கொண்டு அவர் கூறுவன யாவையும் அவனியோர் அனைவருக்கும் பொதுவானவையே.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

எனத் தம் முதற்குறளிலே 'உலகு' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார், எச்சமயத்தவர்க்கும் எம்மொழியினருக்கும் பொதுவான இறைவழிபாட்டையே கடவுள் வாழ்த்தில் அவர் கூறியுள்ளார். தாய்மதத்தையோ, தாய்மொழியையோ தாய் நாட்டையோ தம் நூலில் எங்கும் குறிப்பிடாதது அவரது நூல் உலகப் பொதுவுடைமை என்பதற்குச் சான்றாகும்.

## முடிவுரை :

இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை. மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம். மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்,

திருக்குறள் உலக மக்களுக்காகப் படைக்கப்பட்டது. ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் கற்போம்! கற்றபடி நிற்போம்!

**ப.ஹிந்துஜா**
**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

# புத்தரின் பொன்மொழிகள்..!

- நிரந்தரமானது என்ற தோற்றத்தை அளிப்பது எல்லாம் தற்காலிகமானது அவை அனைத்தும் மறைந்துவிடும்.
- ஒவ்வொரு மாற்றத்திற்கும் ஒரு காரணம் உண்டு. காரணமின்றி விளைவில்லை.
- பிரார்த்தனைகளை விட மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.
- பறக்க வேண்டும் என்று முடிவெடுத்துவிட்டால் முதலில் உங்கள் சுமையை வீசி எறியுங்கள்.
- அமைதியை உங்களிடம் தேடுங்கள் பிறரிடம் தேடாதீர்கள்.
- கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு உனக்கு நீயே கொடுத்துக் கொள்ளும் தண்டனை.
- தோல்வியே அடையாத ஆயுதம் பொறுமை.
- கூர்மையான வாள் கோபத்தில் கூறப்படும் வார்த்தை.
- நமது இன்றைய நிலை நமது எண்ணங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது
- .தவறான பாதையில் வேகமாகச் செல்வதை விட சரியான பாதையில் மெதுவாகச் செல்.

தொகுப்பு: ரா.ஜமுனப்பிரியா
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

# தமிழ்ப் புத்தாண்டு

தமிழர் புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழாவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும், பிற நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும். சூரியன்மேச இராசியில் பிரவேசிக்கும்போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில கிரெகொரிய நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 நாட்களில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதே.

நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக்காலம் கணிக்கப்படுகிறது.

தமிழ் நாட்காட்டி இராசிச் சக்கரத்தை காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேசத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. சங்க இலக்கியமான நெடுநல்வாடையில் மேழமே முதல் இராசி என்ற குறிப்பு[3] காணப்படுவதால், அதை மேலதிக சான்றாகக் கொள்வர். எனினும், பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய *அகத்தியர் பன்னீராயிரம்*, பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த *புட்பவிதி*[4] முதலான நூல்களே தெளிவாக சித்திரை முதல் மாதம் என்று சொல்கின்றன. பங்குனியின் இறுதிநாட்களில் அல்லது சித்திரை முதல் நாளில் தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். மலைபடுகடாம் "தலைநாள் பூத்த பொன் இணர் வேங்கை" என்றும், பழமொழி நானூறு "கணிவேங்கை நன்னாளே நாடி மலர்தலால்" என்றும் பாடுவதால் இளவேனில் துவக்கமான சித்திரையே அக்காலத்தில் தலைநாளாக மிளிர்ந்தது என்றும் சொல்கிறார்கள்.



# டிரினிடி மகளிர் கல்லூரி

## நாமக்கல் – 637 002

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் நிரந்தர இணைவு பெற்றது

புதுதில்லி பல்கலைக்கழக மானியக்குழுவின் 2(f) & 12(b) அங்கீகாரம் பெற்றது

# சிகரம் தொட்ட சாதனை

தேசிய மதிப்பீடு

மற்றும்

தரச்சான்று குழுவினரால்

(NAAC) 3.31 / 4.00 புள்ளிகளுடன்

முதற்சுற்றில் முத்திரை பதித்து

# A$^+$ சான்றிதழ் பெற்று சாதனை

உங்களின் வாழ்த்துகளோடு... எங்களின் வெற்றிப் பயணம்.

தலைவர்–செயலர்– இயக்குநர்கள் – முதல்வர் – பேராசிரியர்கள்– மாணவியர் – அலுவலர்கள்

## டிரினிடி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி

## டிரினிடி பன்னாட்டுப்பள்ளி